சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.02.06.2025
OS.No.92/2024
PW 1 : சரவணன் (வயது 45 ) த/பெ.வடிவேல்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் வழக்கின் வாதியின் அதிகார முகவர். வாதி தரப்பு 1 ஆம் சாட்சி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை. 19.08.1929 ஆம் தேதியிட்ட பதிவு கிரைய பத்திரம் சார்பதிவு நகல் **வா.சா.ஆ.1**. 22.04.1953 ஆம் தேதியிட்ட பதிவு தான பத்திரம் சார்பதிவு நகல் **வா.சா.ஆ.2**. 27.01.2024 ஆம் தேதியிட்ட பட்டா எண்.65 க்கான 10(1) கணக்கு கணிணி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.3**. வழக்கு சொத்திற்கான அரசு வழிகாட்டி மதிப்பு கணிணி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.4**. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**கு.வி** - வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/Signed/
சரவணன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி